## 01-03-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : செவிப்புலன் அற்றோர் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும்**

**தொடக்கவுரையாடல் : மார்க்ஸ் பிரபாகர்**

இயந்திரமயமான இந்த வாழ்க்கை மனிதருக்குப் பல்வேறு விதமான மன அழுத்தங்களைக் கொடுக்கிறது. அவ்வாறான அழுத்தங்களில் இருந்து விடுபட்டு, மன இறுக்கங்களைத் தளர்த்திக் கொள்ள அவர்கள் பல்வேறு விதமான முறைகளைக் கையாள்கிறார்கள். இத்தனைக்குப் பிறகும் அதீத மன அழுத்தங்கள் காரணமாக நிகழும் குற்றச் செயல்கள், தற்கொலைகள் என்பவற்றையும் அவ்வப்போது ஊடகங்கள் நமக்கு தந்த வண்ணமே இருக்கின்றன. இப்படியான சூழலில் செவிப்புலனற்றோர் (காது கேளாத, வாய்ப்பேச முடியாத மனிதர்கள்) தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில், தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் அநேகமாக அசௌகரியங்களை சந்தித்து வருகிறார்கள். தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

செவிப்புலன் அற்றவர்கள் பொதுவாக வாய்பேச முடியாதவர்களாகவே இருப்பர். சிறப்பான பயிற்சிகள் இன்றிச் செவிப்புலன் அற்றவர்களால் பேச முடியாது. இதன்காரணமாக அவர்களுக்கென்று சைகை மொழிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சைகை மொழிகளில் வேறுபாடுகள் உண்டு. அனைத்துலகச் சைகைமொழிக்கும் இலங்கையில் உள்ள சைகை மொழிக்கும் இடையில் மட்டுமல்ல, பிரதேசத்துக்குப் பிரதேசம் கூட சிற்சில வேறுபாடுகள் உண்டு. இலங்கையில் தமிழ்-சிங்களம் இரண்டுக்கும் பொதுவான சைகை மொழியே பயன்பாட்டில் உள்ளது. இலங்கையின் நியமச் சைகை மொழியை சிங்களவரும் தமிழரும் புரிந்துகொள்ள முடியும். இரு மொழி பேசுவோரும் தனித்தனியாக இரு சைகை மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லை.

செவிப்புலன் அற்றவர்களும் வாய்பேச முடியாதவர்களும் பயன்படுத்தும் சைகை மொழிக்கான மொழிபெயர்பாளர்களுக்குப் பாரிய பற்றாக்குறை நிலவுகிறது. சைகை மொழியை மொழிபெயர்க்கக்கூடியவர்கள் பலர் மிகப்பெரிய கட்டணங்களை அறவிடுகிறார்கள். ஆனால் மொழிபெயர்ப்பாளர்களின் தேவையோ எல்லா மட்டங்களிலும் இருக்கிறது. பணவருவாய் குறைந்த செவிப்புலன் அற்ற ஒருவர் நீதிமன்றத்தில் வழக்காடுவது கூட பிரச்சினையானதே. மொழிபெயர்ப்பாளரின் தவறுகளால் உரிய நீதி கிடைக்காமற்போன சந்தர்ப்பங்களும் உண்டு.

சைகைமொழி பேசத்தெரிந்தவர்கள் எமது சமூகத்தில் மிக மிகக்குறைவாகவே இருப்பதால், செவிப்புலன் அற்றவர்கள் சைகையால் பேசுகிற விடயங்களை புரிந்துகொள்வது முடியாதுபோகிறது. புரிந்து கொள்ள முடியாதபோது சைகை மொழியினைப் பேசுவதும் பயனற்றதாகிறது. ஒவ்வொருவரும் சைகை மொழியில் அடிப்படை அறிவினைப் பெற்றுக்கொள்வது இந்த வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில் அரசினால் சைகை மொழிக்கான டிப்ளோமா பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

செவிப்புலன் அற்றவர்களுக்கான பாடசாலைகளில் பொதுவான பாடத்திட்டங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சைகை மொழி சரியாகத் தெரியாதிருப்பது கவலைக்குரிய நிலையாக உள்ளது.

செவிப்புலன் அற்றவர்கள் தமக்கிடையே சைகை மொழிகளைப் பயன்படுத்தும் விதம் ஆர்வமூட்டக்கூடியது. வேகமாகவும் இலாவகமாகவும் அவர்கள் தம்முள் உரையாடக் கூடியவர்களாக உள்ளார்கள். தம்மிடையே சைகை மொழியில் உள்ள பிரதேச வேறுபாடுகளை இலகுவில் கற்றுக்கொள்வதுடன் வேறுபாடான சைகை மொழி பேசுபவருடனும் சரளமாக அவர்களால் உரையாட முடிகிறது.

சைகை மொழியில் பெயர்களை எழுத்துக்கூட்டியா அழைப்பார்கள் என்ற கேள்விக்கு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் தமது சைகை மொழியில் ஒரு பெயரை இட்டுக்கொள்கிறார்கள் என்று பிரபாகரால் பதிலளிக்கப்பட்டது. ஒருவரது உருவமைப்பு, குணாதிசயங்களை வைத்து ஒரு சைகையாகப் பெயர் இடப்படுகிறது.

மிகுதி அடுத்த பக்கம்

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**சிறுவர் மனங்களில் விதைக்கப்படும் ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும்**

திறந்த உரையாடல் | 08-03-2012



கிளாரா

கிளாரா செற்கின் (*Clara Zetkin - née Eißner; 5 July 1857 - 20 June 1933*) ஒரு ஜெர்மானிய மார்க்சியக் கோட்பாட்டாளரும் செயற்பாட்டாளரும் பெண்ணுரிமைப் போராளியுமாவார். 1910ம் ஆண்டு முதலாவது அனைத்துலக பெண்கள் தினத்தை ஒழுங்குபடுத்தியவரும் இவரேயாவார்.

1917ம் ஆண்டுவரை ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியில் செயற்பட்டுக்கொண்டிருந்த இவர், முதலாம் உலகப்போர்க்காலத்தில் அக்கட்சி அரசாங்கத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கை காரணமாக அக்கட்சியின் கொள்கைகளை நிராகரித்து சுதந்திர சமூக ஜனநாயக் கட்சியில் இணைந்துகொண்டார். பின்னர் ஜெர்மனியின் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துகொண்டார்.

ஏனைய போர் எதிர்ப்புச் செயற்பாடுகளுடன் 1915ம் ஆண்டு பேர்ளின் நகரில் அனைத்துலக சோசலிச பெண்கள் போர் எதிர்ப்பு மாநாட்டினைக் கூட்டினார். இவரது போர் எதிர்ப்புக் கருத்துக்களுக்காக இவர் பலமுறை சிறையிலடைக்கப்பட்டார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் தினமும் ஒரு நூற்றாண்டும்

**- பிரதீபா கனகா தில்லைநாதன் எழுதிய கட்டுரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாற்றுத் தகவல்கள்**

([நன்றி: ™தாய்வீடு› - Published in ™Thaiveedu› NewsMonthly›s April Issue]

**முழுமையான கட்டுரைக்கு** : valai.thulaa.net/75

*1910*
இவ்வாண்டில் ஜேர்மனிய சோசலிச ஜனநாயகக் கட்சியின் கிளாரா செற்கினால் முன்மொழியப்பட்டதே சர்வதேச பெண்கள் தினமாகும். 'இரண்டாவது சர்வதேச பெண் தொழிலாளர் கருத்தரங்கினில்' வைத்து அவர் இதனை முன் மொளிந்தார். அவரது பரிந்துரையின் படி, ஒவ்வாரு வருடமும் சகல நாடுகளிலும் அந்த குறிப்பிட்ட நாளில் பெண்கள் அந் நாளைக் கொண்டாட வேண்டும். அவ் பரிந்துரையை அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்த 17 நாடுகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், சோசலிசக் கட்சிகள், பெண் தொழிலாளர் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும்மேற்பட்ட பெண்கள் அனைவரும் ஏகோபித்து ஏற்றுக் கொண்டதன் விளைவாய் 'சர்வதேச பெண்கள் தினம்' பிறந்தது.

*1908:*
பெண்களிடையே பெரும் அமைதியின்மையும் அதனால் தீவிர விவாதங்களும் ஏற்படுகின்றன. சமூகத்திலிருக்கிற பெண் ஒடுக்குமுறை மற்றும் சமத்துவமின்மை என்பன பெண்களை மாற்றங் குறித்து இன்னும் வலுவாகத் தம் குரலை எழுப்பவும், அதை எதிர்த்து இயங்கி மாற்றத்துக்காக பிரச்சாரங்கள் செய்யவும் உந்துகின்றன. இவ்வாண்டில் சுமார் 15 000 பெண்கள் நியூ யோர்க் மாநகரத்தில் அணிவகுத்துச் செல்கிறார்கள். குறைந்த வேலை நேரம், உரிய சம்பளம், வாக்குரிமைக் கோரிக்கைகளுடன்.

*1911 :*
சர்வதேச பெண் தொழிலாளர்கள் கருத்தரங்கினில் முன்மொளியப்பட்ட பிற்பாடு முதல்முதலாக சர்வதேச பெண்கள் தினம் அவுஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிற்சலாந்து ஆகிய இடங்களில் மார்ச் 19 இடம்பெற்றது. ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பெண்களும் ஆண்களும் பெண்களது உரிமைகள் வேண்டியும் பாகுபாடுகளை நிறுத்தவும் அணிதிரண்டார்கள். இது நடந்து ஒரு வாரமும் சில தினங்களும் ஆன பிறகு, மார்ச் 25, துயர்மிகுந்த சம்பவம் ஒன்று நியூ யோர்க் நகரில் இடம்பெற்றது. தொடர்மாடி கட்டிடமொன்றிலிருந்த ஒரு தொழிற்சாலையில் தீப்பிடித்துக் கொள்ள, தொழிலாளர் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டிராத அத் தொழிற்சாலையின் வெளியேறுவதற்கான கதவுகள் மூடப்பட்டிருக்க, தப்பவியலாது 140க்கு மேற்பட்ட தொழிலாளர்களது உயிரை தீ எடுத்துக் கொண்டிருந்தது. அவர்கள் அனேகமானவர்கள் இத்தாலிய மற்றும் யூத பெண்கள் ஆவர். "Triangle Fire" எனப்படும் இத் தீவிபத்துச் சம்பவம் அமெரிக்காவின் வேலைத்தள பாதுகாப்பற்ற நிலைகள், தொழிலாளர் சட்டங்கள் பற்றிய கவனத்தை ஏற்படுத்தியதுடன் பிறகான பெண்கள்-தின நிகழ்வுகளின் முக்கிய கருப்பொருளாகவும் ஆகியது. இவ்வருட இறுதிகளில் "பாணும் பூக்களும்" ("Bread & Roses")என அறியப்படுகின்ற (பெரும்பாலும் பெண்களாலான தொழிற்சாலைத்) தொழிலாளர்களது வேலைநிறுத்தமும் பரந்தளவில் அறியப்பட்டதும், தொழிலாளர் வரலாற்றில் பேசப்படுவதும் ஆகும்.

*1913-1914:*
முதலாம் உலக யுத்தத்தின் தொடக்கம். பெண்கள் யுத்தத்திற்கு எதிராக அணிதிரண்டார்கள். யுத்தத்துக்கு எதிராகவும் பெண்களது ஒருங்கிணைவை வெளிப்படுத்துவதாகவும் பேரணிகள் ஐரோப்பா முழுவதும் இடம்பெற்றன.

*1917:*
போரினில் இரண்டு மில்லியனுக்கும் மேலான உருஷ்யப் படையினர் இறந்ததை அடுத்து, பெப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிறு உருஷ்யப் பெண்கள் "பாணும் சமாதானமும்" ("bread and peace") வேண்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அரசியல்த் தலைவர்களது எதிர்ப்புகுள்ளும் பெண்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பிறகு உருஷ்சிய தேசம் தனது அதிகாரத்தை வேறு வழியற்றுக் கைவிட வேண்டியும் வந்தது. பெண்கள் வாக்குரிமை பெற்றார்கள். பெண்களது வேலை நிறுத்தம் தொடங்கிய திகதியானது அப்போது உருஷ்சியாவில் பாவனையிலிருந்த ஜீலியன் கலெண்டரின் அடிப்படையில் 23 பெப்ரவரி 1917 ஆகும் ஆனால் கிறகோரியன் கலெண்டர் பாவனையிலிருந்த ஏனைய இடங்களில் அது மார்ச் 8.

*1918 - 1999*

சோசலிச இயக்கத்தினூடாக அதன் பிறப்பு நிகழ்ந்த பிற்பாடு, பெண்கள் தினம் ஒரு சர்வதேச தினமாக கவனத்தையும் கொண்டாட்டத்தையும் கொண்டதாய் சகல நாடுகளிலும் வளர்ச்சியடைந்திருக்கின்றது.

மேலும்: பெண்களின் வளர்ச்சியை கௌரவிக்கவும், வாழ்வின் சகல கூறுகளிலும் பெண் சமத்துவம் மிளிர, செய்ய வேண்டியிருக்கிற வேலைகளை முன்னெடுத்தச் செல்லவும் வருடாவருடம் பல அமைப்புகள், அரசுகள் பெரியளவில் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்கின்றன.

*2000:*
சீனா, அர்மீனியா, ருஷ்யா, பல்கேரியா, கஸக்ஷ்ரான், கிர்கிஸ்ரான், மாசிடொனியா, மொல்டோவா, மொங்கோலியர், இரஜிக்ஸ்ரான், உக்ரேன், உஸ்பேகிஷ்ரான், வியட்னாம் போன்ற நாடுகளில் தேசிய விடுமுறை நாள். இந்த நாளில் ஆண்கள் தமது தாய், மனைவி, பெண் நண்பர்கள், சக பெண் வேலையாட்களுக்கு தம் மதிப்பைத் தெரிவிக்க மலர்களையோ சிறிய பரிசுகளையோ வழங்குவதை மரபாகக் கொண்டிருக்கின்றார்கள். சில நாடுகளில், அன்னையர் தினத்துக்குச் சமனானதாய், பிள்ளைகள் தமது தாய்மாருக்கும் பாட்டிமார்களுக்கும் சிறு பரிசுகளை வழங்கும் தினமாக மதிக்கப்படுகின்றது.

## செவிப்புலன் அற்றோர் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

முன்பக்கத் தொடர்ச்சி..

பெரும்பான்மையான மனிதர்கள் செவிப்புலன் உள்ளவர்களாகவும் கண்பார்வை உள்ளவர்களாகவும் கைகால்கள் இயங்கும் நிலையில் உள்ளவர்களாகவும் இருப்பதால், அவ்வாறில்லாத சிறுபான்மை பற்றிய அக்கறை எமது சூழலில் மிகக்குறைவாகக் காணப்படுகிறது. கட்டிடங்கள் கட்டும்போதும், அறிவித்தல்கள் வழங்கும்போதும், மென்பொருள் வடிவமைப்பின்போதும் இன்னும் பல்வேறு விடயங்களிலும் சிறுபான்மையாக உள்ளவர்கள் பற்றிய அக்கறை எடுக்கப்படுவதில்லை. பெரும்பான்மையின் மதை மாற்றி அவர்களது இரக்கத்துக்கு இறைஞ்சுவதாக மட்டும் சிறுபான்மைகளது தேவைகளைப் பூர்த்தி செய்யும் மார்க்கம் இருந்துவிட முடியாது. அது சாத்தியமனாதும் அல்ல. சிறுபான்மைகள் தமது தேவைகளை, தமக்கான வசதிகளை எல்லா இடங்களிலும் கோரும் அழுத்தக்குழுக்களாக இருக்கவேண்டும். தமது உரிமையை, தம்மையொத்தவர்களையும் ஆதரவாளர்களையும் கூட்டாக இணைத்து உரத்துச்சொல்வதற்கான வழிமுறைகளைக் கொண்டிருக்கவேண்டும். இதன்மூலம் மற்றுமே சிறப்புத்தேவை உள்ளவர்கள் உள்ளிட்ட எந்தவொரு சிறுபான்மையினரும் தமது உரிமைகளை வென்றெடுத்து இந்த உலகைத் தமக்கானதாகவும் மாற்றிக்கொள்ள முடியும், என்ற கருத்து கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டது.

குருடர், செவிடர் போன்ற சொற்களுக்குத் தற்போது மாற்றுச்சொற்கள் பயன்படுத்தப்படுவது பற்றிய உரையாடலும் இடம்பெற்றது. புதிதாக உருவாக்கப்படும் கலைச்சொற்கள் பொருள் மயக்கம் தருவனவாக, தெளிவற்றதாக இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. எவ்வாறாயினும் குருடர் செவிடர் போன்ற சொற்கள் வசைச்சொற்களாயும் குறித்த மனிதரைக் கீழ்மைப்படுத்துவதாகவும் எமது மொழிகளில் மாறிப்போயிருப்பதால் புதிய சொற்களுக்கான தேவை எழுதிருப்பதை மறுக்கமுடியாது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இவ்வாறாக ஆரோக்கியமற்ற அர்த்தத்தினை சொற்கள் எடுக்கும்போது மொழியின் வளர்ச்சிப்பாதையில் தொடர்ச்சியாக மாற்றங்கள் தேவைப்பட்டுக்கொண்டே இருக்கும் என்றும் கூறப்பட்டது.

## சிறுவர் மனங்களில் விதைக்கப்படும் ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும்

**இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.**

இன்று சமூகத்தில் ஆண்கள் மத்தியில் காணப்படும் ஆணாதிக்கத் தன்மைகளுக்கும் பெண்கள் மத்தியில் காணப்படும் பெண்ணடிமை மனநிலைக்கும், அவர்கள் சிறுவயது முதலே கற்றுக்கொண்ட பல்வேறு கருத்தியல்களும் காரணமாக அமைகின்றன.

இதன்காரணமாகவே இவ்வாறு ஆழப்பந்திந்த கருத்துக்களை மாற்றி சுயமரியாதையுடன் வாழவைப்பது கடினமான காரியமாக மாறுகிறது.

வீடுகளில் பெற்றோரது வாழ்க்கைமுறை, அவர்களது நடவடிக்கைகள், அவர்கள் சொல்லிக்கொடுக்கும் கருத்துக்களில் தொடங்கி மதங்கள், சுற்றம், பாடசாலை, பாடத்திட்டங்கள், ஊடகங்கள் வரை சிறுவர் மனங்களில் இவ்வாறான அக்ருத்துக்களை விதைக்கின்றன.

இதனை விரிவாகப் புரிந்துகொள்வதற்கான எத்தனமாகவும், இதற்கான தீர்வாக அமையக்கூடிய வழிமுறைகள் பற்றிய தேடலாகவும் இன்றைய உரையாடல் அமையும்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

CC BY NC SA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org